DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -32

| | | |
|---|---|---|
| Name | : Dr.ரவிசங்கர் | Caste: |
| Father's Name: | திரு. ரத்தினம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**29.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.05.2008 அன்று அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் பிற்பகல் 4.20 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் அலுவலலில் இருந்தபோது மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து கு.எண்.130/2008 இ.த.ச.பிரிவுகள் 147, 148, 341, 326, 324, 302, 307 மற்றும் 120(பி) படியான வழக்கில் சம்மந்தப்பட்ட மகாலிங்கம் த.பெ.காசிநாதன் என்ற சுமார் 24 வயது நிரம்பிய ஆண் பிரேதத்தின்மீது சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதமானது மேற்படி காவல்நிலைய த.கா.628 திரு. கோவிந்தராஜ் என்பவர் மூலமாக பெறப்பட்டது.

பிரேதத்தை மேற்படி த.கா.கோவிந்தராஜன் என்பவர் என்னிடம் ஒப்படைத்து அடையாளம் காண்பித்தார். அந்த விண்ணப்பத்திற்கிணங்க அன்றையதினமே பிற்பகல் 4.30 மணிக்கு சடலக்கூராய்வை ஆரம்பித்தேன்.

பிணவிரைப்பு தன்மை பிரேத்தின் இரண்டு கால்களிலும், இரண்டு கைகளிலும் காணப்பட்டது. அந்த பிரேதம் ஓரளவு திடகார்த்திரமான ஆண் பிரேதம். பிரேதம் மல்லாந்த நிலையில், கைகள் பக்கவாட்டிலும், கண்கள் மூடிய நிலையில் காணப்பட்டது. வாய் பாதி திறந்த நிலையில் காணப்பட்டது. வாயின் இரண்டு ஓரங்களிலும் ரத்தம் உறைந்து காணப்பட்டது.

பிரேதத்தில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. கழுத்தில் 10x3 cmx கழுத்தின் 4 வது எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் வழியே மூச்சுகுழாய், உணவுகுழாய், முக்கிய ரத்தநாளங்கள் மற்றும் கழுத்தின் தசைகள் வெளியே தெரிந்தது.

2. வலது பக்க முகத்தில் மூக்கிலிருந்து கன்னம் வரை 5x1 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

3. பின்மண்டையில் 4x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட வெட்டு காயம் காணப்பட்டது.

**<u>உட்புறகூராய்வு</u>**

**<u>மார்பு பகுதி –</u>** விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை. இருதயத்தின் அனைத்து அறைகளும் காலியாக காணப்பட்டது.

**வயிற்று பகுதி–** இரைப்பை காலியாக காணப்பட்டது. குறிப்பிடதகுந்த எந்த வாடையும் இல்லை. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை ரத்தம் செரிந்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

**கபாலம்–** பின்புற கபால எலும்பின் வெளியோட்டில் முறிவு காணப்பட்டது. மூளை ரத்தம் செரிந்து காணப்பட்டது. சிறிய ரத்தகசிவானது பின்மூளையின் வலது பக்கத்தில் காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு பிண கூராய்வு நிறைவு செய்யப்பட்டது.

மேற்படி நபர் பிணகூராய்வு செய்யப்படுவதற்கு 6 முதல் 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்க கூடும்.

மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட காயங்களினால் ஏற்பட்ட அதிர்ச்சி, முக்கிய உறுப்புகளான மூச்சுகுழாய், உணவுகுழாய், கழுத்தின் முக்கிய ரத்த நாளங்கள் மற்றும் மூளை ஆகியவற்றில் ஏற்பட்ட ரத்தகசிவு ஆகியவற்றின் காரணமாக இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.34.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள் மற்றும் வீச்சருவாள் போன்றவற்றால் ஒரு நபர் தாக்கப்படும்போது நான் மேலே சொன்ன வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் பிரேதபரிசோதனை முடிந்து 16 வருடங்கள் ஆகிவிட்ட காரணத்தினால் அதுபற்றி எனக்கு சரியாக நினைவில்லை. ஆனால் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது ஆயுதங்களை காட்டி விசாரித்தார்களா என்று நினைவில்லை. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட ஆயுதங்களை கொண்டு ஒரு நபர் தாக்கப்படும்போது மேற்கண்ட வெளிபுறகாயங்கள் ஏற்படுவதற்கு வாய்புண்டு என்று நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று நினைவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.